# பிரசுரகளம்
Pirasurakalam

ஆசிரியர்: என்.செல்வராஜா

இது ஒரு நூல்தேட்டம் வெளியீடு

Editor: N. Selvarajah

இதழ்: 5 ஜூன் 2010

Issue: 5


## நுழைவாயில்

**பிரசுரகளத்தின்** இவ்விதழ் ஊடகவியல்துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்கு, அத்துறையில் அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்ட எட்டு நூல்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் வெளிவருகின்றது.

இவை அனைத்தையும் எழுதியவர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை. சில்லாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை 1959 ஜுன் மாதம் 24ம் திகதி பிறந்தவர். சில்லாலை ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் 1965இல் தன் ஆரம்பக்கல்வியையும், பின்னர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் 1972இல் தன் உயர் கல்வியையும் பெற்றவர். கண்டி மாவட்டத்தின் அம்பிட்டிய தேசிய இறையியல் கல்லூரியில் 1982இலும், புனித பிரான்சிஸ் குருத்துவக் கல்லூரியில் 1984இலும் தன் இறையியல் கல்வியை மேற்கொண்டவர். 1986முதல் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கக் குருவானவராக பணியாற்றுபவர்.

1979ஆம் ஆண்டு **மௌன ஊர்வலம்** என்ற பாதுகாவலன் பத்திரிகையில் வெளிவந்த சிறுகதை மூலம் பத்திரிகைத்துறைக்கு அறிமுகமானவர் இவர். அன்றிலிருந்து இன்றுவரை ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட கட்டுரைகளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பாதுகாவலன் பத்திரிகையில் எழுதியுள்ளார். பத்திரிகைத்துறையில் நீண்டகால அனுபவம் பெற்ற ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார், யாழ்ப்பாணத்தில் மிக நீண்ட வரலாறு கொண்ட பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் பாதுகாவலன் பத்திரிகையில் ஆசிரியராக இருந்தபோதே அப்பத்திரிகை 2000ஆம் ஆண்டிற்கான சிறந்த வடிவமைப்புக்கொண்ட தமிழ்ப் பத்திரிகைக்கான தேசிய விருதினைப் பெற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தகுந்தது.

ஈழநாடு, முரசொலி, போன்ற பத்திரிகைகளில் தவக்காலச் சிந்தனைகள் என்ற பகுதியின் வழியாக அறிமுகமான இவர் ஈழநாடு பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். நான் என்ற உளவியல் சஞ்சிகை, இறையியல் கோலங்கள், புதிய உலகம், மற்றும் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தொண்டன் போன்றவற்றிலும் இவரது பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

உதயன் பத்திரிகையில் ஏறக்குறைய 30க்கும் அதிகமான சமயக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறையில் சான்றிதழ் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட இவர், பின்னர் தன் பத்திரிகைத்துறைக்கான பட்டப்பின் படிப்பையும், முதுகலைமாணிப் பட்டத்தையும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டவர்.

தற்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் ஊடகத்துறையில் கலாநிதிப் பட்டத்திற்கான உயர் ஆய்வினை இங்கிலாந்தின் *Sheffield* ஹாலம் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றார்.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராகப் பணியாற்றிய அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் கல்விசார் செயற்பாடுகளுக்கான இணைப்பாளராகக் கடந்த பல வருடங்களாகப் பணியாற்றி வருகின்றார். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் நினைவாக, *Bishop Savundram Media Centre* என்ற பத்திரிகையியல் கல்வி நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் 2000ம் ஆண்டில் உருவாக்கி இன்றுவரை இயக்கியும் வருகின்றார்.

இத்தகைய ஊடகவியல் பின்னணியில் இவர் எமக்கு வழங்கியுள்ள கனதியான நூல்களைப் பற்றிய தகவல்களை உள்ளே காணலாம்.

மீண்டும் சந்திப்போம்.

**என்.செல்வராஜா**
ஆசிரியர்
20.06.2010

**இவ்விதழில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தையும் ஒரு தொகுதியாக விற்பனை செய்ய அதன் ஆசிரியர் முன்வந்துள்ளார். எட்டு நூல்களையும் பெற விரும்புவோர் பிரசுரகளத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**தொலைபேசி இலக்கம்: செல்வராஜா (0044) 07817402704 selvan@ ntlworld.com**

**Single copy £ 10.00 Set Price £ 60.00 (Postage included)**




## பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி,
1வது பதிப்பு, ஆகஸ்ட் 2001.
(யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
xiv, (6), 230 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், அளவு: 21X14.5 சமீ.
(ISBN: 955 97565 0 8).

எளிய இனிய தமிழ்நடையில் பத்திரிகைத்துறையின் பல்வேறு அடிப்படை அறிவை வழங்கும் நூல். 13 இயல்களில் பத்திரிகையாளருக்குத் தேவையான அத்தியாவசியமான அறிவுரைகள் இங்கே உதாரணங்களுடன் வழங்கப்பட்டுள்ளன.




## ஊடக இயல் கலைச்சொல் அகராதி.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம், இல. 891, ஆஸ்பத்திரி வீதி,
1வது பதிப்பு, டிசம்பர் 2003.
(யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி)
xiii, 244 பக்கம், விளக்கப் படங்கள், அளவு: 21X14 சமீ.,
ISBN: 955-97574-4-X.

ஆரம்ப ஊடகவியலாளர்களுக்கு ஊடகவியல் கலைச்சொற்களை அறிமுகப்படுத்தும் ஒரு நூல். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களில் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்கள் மற்றும் விளக்கங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் விளக்கங்களையும் அறிந்துகொள்ள விரும்புவோருக்கு இந்நூல் உதவும்.




## அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல்.

ரூபன் மரியாம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர், இல.891, ஆஸ்பத்திரி வீதி,
1வது பதிப்பு, டிசம்பர் 2006.
(யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).
xvi, 202 பக்கம்,
அளவு: 21.5x16 சமீ.,
ISBN: 955-1395-02-6.

ஒரு செய்தி அதனை வாசிப்பவர் அல்லது கேட்பவர் அல்லது நோக்குபவர் மீது ஏற்படுத்தும் தாக்கம்- அச்செய்தி எவ்வாறு தலைப்பிடப்படுகின்றது – எவ்வாறு அறிக்கையிடப்படுகின்றது அல்லது கூறப்படுகின்றது என்பதில் பெரிதும் தங்கியிருக்கும். அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல் என்ற தலைப்பிலான இந் நூல் ஆசிரியரின் பத்திரிகைத்துறை சார்ந்த ஏழாவது நூலாகும். செய்தியின் வரைவிலக்கணம், செய்திக் கூறுகள், செய்தி அடிப்படைகள், செய்தி மதிப்பு, செய்தியின் வகைகள், செய்தியாளர்களின் பாதுகாப்பு, செய்தி அமைக்கும் முறைகள், களச் செய்தி அறிக்கையிடல் ஆகிய எட்டு இயல்களில் இந்நூலை எழுதி முடித்துள்ளார்.




## பத்திரிகை இயல் அடிப்படைகள்.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி,
1வது பதிப்பு, டிசம்பர் 2002.
(யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).
xiv, 350 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், அளவு: 21X14 சமீ.
(ISBN 955 97574 2 3).

பதினொரு இயல்களைக்கொண்ட இந்நூலில் பத்திரிகைத்துறையின் நுட்பங்களைத் தமது ஆய்வறிவினாலும், அனுபவ ஞானத்தினாலும் ஆசிரியர் நோக்கியுள்ளார். பத்திரிகைகளின் தன்மை, அமைப்பு, உள்விபரங்கள், மொழிநடை, விளம்பரங்கள், இலங்கைப் பத்திரிகைப் பேரவை, பத்திரிகைச் சுதந்திரம், பத்திரிகையாளர் ஒழுக்கநெறி போன்ற பல விடயங்களை சேர்த்துள்ளார். பின்னிணைப்பில் இலங்கையில் வெளிவந்த தமிழ்ப்பத்திரிகைகள் தொடர்பான நீண்ட விபரப்பட்டியல் ஒன்றும் சில பத்திரிகைகளின் முகப்புப்பக்கங்களும் தரப்பட்டுள்ளன.




## ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம்.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம், இல. 891, ஆஸ்பத்திரி வீதி,
1வது பதிப்பு, டிசம்பர் 2004.
(யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
360, பிரதான வீதி).
(64), xiv, 312 பக்கம், புகைப்படங்கள், அளவு: 22X15 சமீ.,
ISBN: 955-97574-5-8.

16 இயல்களையும் 3 பின்னிணைப்புகளையும் கொண்ட இப்பாரிய தொகுப்பில் ஊடகத்துறையில் நேர்காணல்களை வெற்றிகரமாகவும், சுவாரஸ்யமாகவும் மேற்கொள்வது எப்படி என்று பயிற்றுவிக்கப்படுகின்றது. நேர்காணல் குறித்து ஆழமாகவும் விரிவாகவும் அலசி ஆராயும் இந்நூல் இதழியல் கற்கை நெறியில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் பயன்தரும் என நம்பலாம். நேர்காணலின் தோற்றம், வளர்ச்சி, வகைமைகள், நவீன பதிவுகள், இவை குறித்த உலகளாவிய பார்வை என்னும் முழுமையை எட்ட முயன்றுள்ளது இந்நூல். வளர்ந்துவரும் நேர்காணல் கலையின் நுட்பங்களை ஆராயும் இந்நூல் செய்தித்துறையின் காலத்தின் தேவையாக அண்மைய வரவான மின்னஞ்சல் நேர்காணல்களையும் ஆராய முற்பட்டுள்ளது. பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும், பிஷப் சௌந்தரம் பத்திரிகையியல் நிலையத்தின் ஊடகவியல் துறையின் ஆய்வாளராகவும் பணியாற்றும் இந்நூலாசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் ஏற்கெனவே ஊடகவியல்துறையில் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

**இவ்விதழில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தையும்
ஒரு தொகுதியாக விற்பனை செய்ய அதன்
ஆசிரியர் முன்வந்துள்ளார்.
எட்டு நூல்களையும் பெற விரும்புவோர் பிரசுரகளத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம்: செல்வராஜா (0044) 07817402704 selvan@ ntlworld.com**



## சித்திரிப்பு எழுத்துக்கள்: ஓர் அறிமுகம்.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர், இல.891, ஆஸ்பத்திரி வீதி,
1வது பதிப்பு, டிசம்பர் 2007.
(யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).
vi, 238 பக்கம், அளவு: 21 x14.5 சமீ.,
ISBN: 955-1395-05-0.

Bishop Savundram Media Centre மூலமாக வெளியிடப்படும் பத்திரிகையியல் சார்ந்த எட்டாவது நூல் இது. சித்திரிப்பு எழுத்துக்கள் என்றால் என்ன, சித்திரிப்பு எழுத்துக்களை எழுதுவது எப்படி, சித்திரிப்பு எழுத்துக்களின் வகைகள், சித்திரிப்பு எழுத்துக்கான ஆய்வு, செய்திக்கும் சித்திரிப்பு எழுத்துக்குமான வித்தியாசம், சித்திரிப்பு எழுத்தில் என்ன இருக்கவேண்டும், சித்திரிப்பு எழுத்துக்களை எழுதுதல், சித்திரிப்பு எழுத்துக்கான நேர்காணல், இந்தியப் பத்திரிகைகள் -சில கண்ணோட்டம் ஆகிய 9 இயல்களில் இந்நூல் விரிகின்றது.




## செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம்.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர், இல.891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2005.
(யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதான வீதி).
viii, 269 பக்கம், அளவு: 21.5x16 சமீ.,
ISBN: 955-1395-00-X.

Bishop Savundram Media Centre மூலமாக வெளியிடப்படும் பத்திரிகையியல் சார்ந்த ஆறாவது நூல் இது. இந்நூல் 2005ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்திப் பரிசினை பல்துறை நூலுக்காகப் பெற்றது. செய்திகளின் கவனயீர்ப்பில் முதன்மைபெறும் தலையங்கங்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு தேர்ந்தெடுக்கவேண்டும் அல்லது எவ்வாறு தேர்ந்தெடுக்கக்கூடாது என்று ஏராளமான உதாரணங்களுடன் இந்நூல் விளக்குகின்றது.




## மின்னியக்க பத்திரிகை இயல்: ஓர் அறிமுகம்.

ரூபன் மரியாம்பிள்ளை.
யாழ்ப்பாணம்: சவுந்தரம் பத்திரிகையியல் நிலையம், 891, ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. ( யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360 பிரதான வீதி).
xii,224 பக்கம், விளக்கப்படங்கள், அளவு: 21X14.5சமீ. ISBN: 955 97574 4 x

மின்னியக்க ஊடகங்களை அறிமுகப்படுத்தும் இந்நூலாசிரியர் யாழ்ப்பாண மறைமாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்கக் குருவானவரும், யாழ்ப்பாணம் புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரும், சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமாவார். ஒன்பது இயல்களில் அமைந்த இந்நூலின் இறுதி இரு இயல்களிலும் முறையே அச்சுப் பத்திரிகை மற்றும் மின்னியக்கப் பத்திரிகைகள் (இணையத் தளங்கள்) போன்றவற்றின் முகவரிகளும், மின்னியக்கப் பத்திரிகையியல் (Electronic Journalism) கலைச்சொற்களின் அகராதியும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.